ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருவாய்மொழித் தனியன்கள்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருவாய்மொழித் தனியன்கள்

## தனியன்கள்

ப$_4$க்தாம்ரு’தம் விஶ்வஜநாநுமோத$_3$நம்
ஸர்வார்த$_2$த$_3$ம் ஸ்ரீஶட$_2$கோபவாங்மயம் ।
ஸஹஸ்ரஶாகோ$_2$பநிஷத்ஸமாக$_3$மம்
நமாம்யஹம் த்$_3$ராவிட$_3$வேத$_3$ஸாக$_3$ரம் ॥

திருவழுதி நாடென்றும் தென் குருகூர் என்றும் ⋆
மருவினிய வண் பொருநல் என்றும் ⋆
அரு மறைகள் அந்தாதி செய்தான் அடி இணையே எப்பொழுதும் ⋆
சிந்தியாய் நெஞ்சே ! தெளிந்து

மனத்தாலும் வாயாலும் வண் குருகூர் பேணும் ⋆
இனத்தாரை அல்லாதிறைஞ்சேன் ⋆
தனத்தாலும் ஏதும் குறைவிலேன் எந்தை சடகோபன் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

ஏய்ந்த பெருங்கீர்த்தி இராமானுசமுனி தன் ⋆
வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன் ⋆
ஆய்ந்த பெரும் சீரார் சடகோபன் செந்தமிழ் வேதம் தரிக்கும் ⋆
பேராத உள்ளம் பெற

வான் திகழும் சோலை மதிள் அரங்கர் வண் புகழ் மேல் ⋆
ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரமும் ⋆

ஈன்ற முதல் தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த ⋆
இதத்தாய் இராமானுசன்

மிக்க இறை நிலையும் மெய்யாம் உயிர் நிலையும் ⋆
தக்க நெறியும் தடை ஆகித் தொக்கியலும் ⋆
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர் கோன் ⋆
யாழின் இசை வேதத்தியல்

திருவாய்மொழித் தனியன்கள் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்